**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .8/2017** | | |
| **PW/DW/CW** | : | **PW15** | | |
| **Name** | : A. கமர்நிஷா | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent u/s. 355 of BNSS petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **14.03.2025**

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை பொருளாதார குற்றப் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.04.2016ம் தேதி மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்த போது அன்றைய தினம் 13.15 மணியளவில் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, டி. சுப்புலாபுரத்தைச் சேர்ந்த வேங்கடசாமி மகன் மகாராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்த வாக்குமூலத்தை மகாராஜன் என்பவரிடம் படித்து காண்பித்து அவர் சரி என்று சொன்னவுடன் அதில் கையொப்பம் பெற்று உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையத்தில் குற்ற எண் 108/2016 பிரிவுகள் 279,337,304A இதசவாக வழக்கு பதிவு செய்தேன். அசலை நீதிமன்றத்திற்கும், சமந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

2) இந்த வழக்கின் புகார் வாக்குமூலத்தில் எதிரி ஓட்டி வந்த வாகனம் எவ்வளவு வேகமாக வந்தது என குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் தனது புகாரில் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்தார் என்று சொல்லியுள்ளார். புகார்தாரரும் விபத்தில் இறந்த நபர்களும் பயணம் செய்த பொலிரோ பிக்கப் வாகனம் லோடு வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்தில் ஆட்களை ஏற்றி வருவது மோட்டார் வாகன சட்டப்படி குற்றம்

என்றால் சரிதான். அந்த புகார் வாக்குமூலத்தில் அந்த வாகனம் மேற்கிலிருந்து கிழக்காக வரும் நிலை தடுமாறி சாலையில் வலது புறமாக கவிழ்ந்ததாகவும், வண்டியில் இருந்தவர்கள் ரோட்டில் சிதறி கிடந்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் இறந்த நபர்களுக்கு இழப்பீடு பெற்று தரவேண்டும் என்பதற்காக எந்திர கோளாறால் ஏற்பட்ட விபத்தை எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

S.d./Kamar nisha
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.